0222

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**கல்விப்பீடம்**
**கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**
**இறுதிப் பரீட்சை – 2024/2025**

# STP9812– கல்வி சமூக மற்றும் தத்துவவியல் அடிப்படைகள்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.01.2026 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.**

1.

i. விழுமியக் கல்வி என்பதனை வரைவிலக்கணம் செய்து, விழுமியக் கல்வி எண்ணக்கருவினை விளக்குக. (05 புள்ளிகள்)

ii. சமகால ஊடகங்கள் விழுமியக் கல்வியில் ஏற்படும் நேர்மறையான நான்கு (04) தாக்கங்களை உதாரணங்களுடன் விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

iii. இலங்கை பாடசாலை முறைமையில், விழுமியங்களை விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் நான்கு (04) சவால்களைச் சுருக்கமாக விபரித்து, அவற்றில் ஒன்றிற்கு சாத்தியமான தீர்வினைப் பரிந்துரைக்குக. (10 புள்ளிகள்)

2.

i. கல்வி மற்றும் மனித அபிவிருத்திக்கிடையிலான தொடர்பைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

ii. 1972 கல்வி சீர்திருத்தங்கள் இலங்கையின் இடைநிலைக் கல்வியில் மனித விருத்தியை மேம்படுத்துவதற்காக ஆற்றிய பங்கிப்புக்களை மதிப்பீடு செய்க. (10 புள்ளிகள்)

iii. தொழிநுட்பம் உருவாக்கும் எதிர்கால வேலை உலகின் மாற்றங்களை எதிர்கொள்ள இலங்கை மாணவர்கள் விருத்தி செய்துகொள்ள வேண்டிய ஐந்து (05) திறன்களை உதாரணங்கள் தந்து விவாதிக்குக. (10 புள்ளிகள்)

3.

i. குறைந்த வருமானங்களை சேர்ந்த பிள்ளைகளுக்கு, முதன்மை சமூகமயமாக்கல் முகவராக கருக்குடும்பம் வழங்கும் நேர்மறைக் காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

ii. கீழ் சமூக வகுப்பு என்பதனைச் சுருக்கமாக விளக்கி, இலங்கைச் சூழலில் கீழ் சமூக வகுப்பு மாணவர்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) கல்விப் பிரச்சினைகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

iii. இலங்கையில் கல்வி, தலைமுறைகளுக்கிடையிலான சமூக அசைவினை எளிதாக்குகிறது. இக்கூற்றை ஆதரித்து அதற்கான காரணங்களைத் தருக. (10 புள்ளிகள்)

4.

i. கல்வி மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படும் ஐந்து (05) சமூக எதிர்பார்ப்புக்களைச் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

ii. கல்வி தொடர்பாக தொழிற்பாட்டுவாத கோட்பாட்டு நோக்குகளை ஆய்வு செய்க. (10 புள்ளிகள்)

iii. இன்றைய இலங்கைக் கல்வியை ஒரு முதலீடாக கருத முடியுமா? உங்கள் விடையை ஐந்து (05) காரணங்களுடன் நியாயப்படுத்துக. (10 புள்ளிகள்)

5.

i. அரசியல் சமூகமயமாக்கல் என்ற எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. சமூகத்தில் தனிநபர்கள் அரசியலில் பங்கேற்கக் கூடிய வழிமுறைகளை உதாரணங்கள் தந்து விவாதிக்குக. **(10 புள்ளிகள்)**

iii. பாடசாலைகளில் அரசியல் கற்பித்தல் மூலம் மாணவர்களில் விருத்தி செய்யப்பட வேண்டிய **ஐந்து (05)** சனநாயக விழுமியங்களை இனங்கண்டு, அவற்றை விருத்தி செய்வதற்கு ஆசிரியராக நீங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. **(10 புள்ளிகள்)**

6.

i. கல்வி ஒரு முழுமையான மனிதனை உருவாக்க வேண்டுமென கீழைத்தேய தத்துவவாதிகள் நம்பினர். **இரண்டு (02)** தத்துவ சிந்தனைகளைப் பயன்படுத்தி இக்கூற்றினை விவாதிக்குக. **(05 புள்ளிகள்)**

ii. கல்வியின் நோக்கங்கள் தொடர்பாக கீழைத்தேய மற்றும் மேற்குலக தத்துவவாதிகள் முன்வைக்கும் வாதங்களை ஒப்பீட்டு ரீதியாக ஆய்வு செய்க. **(10 புள்ளிகள்)**

iii. சமூக மாற்றத்திற்கான முகவராக, கல்வி செயற்படும் போது, எழக்கூடிய **ஐந்து (05)** சவால்களை இனங்கண்டு அவற்றை கையாள பாடசாலைகள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குக. **(10 புள்ளிகள்)**

- *பதிப்புரிமை பெற்றது* -